DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.185/2025

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | சின்னுசாமி (Lw – 4) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 18.11.2025**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். **(**சாட்சி எதிரியை அடையாளம் காண்பித்தார்**.)**

13.03.2025ம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில் நான் வேலைக்குசென்றுவிட்டு வீட்டிற்கு வந்துகொண்டிருந்தேன். அப்போது எங்கள் தெருவில் அமைக்கப்பட்டிருந்த பஞ்சாயத்து பைப்பில் தண்ணீர் பிடிக்க கூடாது என்று ஆஜர் எதிரி அ.சா.1 சித்ராவிடம் சொல்லி பிரச்சனை செய்தார். அ.சா.1 சித்ரா பஞ்சாயத்து பைப்பில் நான் தண்ணீர் பிடிப்பேன் என்று கூறியதற்கு ஆஜர் எதிரி குடத்தால் சித்ராவின் தலையில் அடித்தார். சித்ரா கீழே விழுந்துவிட்டார். அவருக்கு தலையில் ரத்தம் வந்தது. சாட்சி - 5 தர்மலிங்கம் சித்ராவின் கணவருக்கு தகவல் சொன்னார். நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் சம்பவத்தன்று எங்கு வேலைக்கு சென்றுவந்தேன் என்றால் கோம்பை

காட்டிற்கு வேலைக்கு சென்று வந்தேன். சம்பவத்தன்று நான் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தேன் என்றால் மதியம் 02.45 மணிக்கு வந்தேன். பொதுவாக எனக்கு வேலை 05.00 மணிக்கு முடியும் அன்று வியாழன் கிழமை என்பதால் சீக்கிரம் வேலை முடிந்துவிட்டது. பொதுவாக எனக்கு சனிக்கிழமை தான் சம்பள நாள் என்றால் சரியல்ல வியாழன் கிழமை ஆகும். எனது வீட்டிற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் இருக்கும். சம்பவத்தின்போது ஆஜர் எதிரியின் கணவர் சம்பவ இடத்தில் இருந்தாரா என்றால் இல்லை. சம்பவத்தின் போது ஆஜர் எதிரி மற்றும் வாதியை தவிர வேறு யாரேனும் தண்ணீர் பிடித்து கொண்டிருந்தார்களா என்றால் இல்லை. பஞ்சாயத்து பைப் கலைச்செல்வன் என்பவரின் வீட்டின் முன்புதான் அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் வாதி எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**